ஆ

# அறநெறி மணிகள்

## 2-ம் பகுதி

* 4 ச நல்வழி
  ( ஔவையார் )
* 5 ரு வெற்றிவேற்கை
  ( அதிவீரராமபாண்டியன் )
* 6 சூ விவேகசிந்தாமணி

இலவச வெளியீடு கச 14
(மத்திய பிரிவு மாணவர்களுக்கானது)

**விநாயகர் தரும நிதியம்**
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

# விநாயகர் தருமநிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

"அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிடராகலரிது
மானிடராயினும் கூன்குருடு செவிடு
பேடுநீங்கிப் பிறத்த லரிது
பேடுநீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமுந்தான் செய்வ ராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே"

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி இருக்கலாம் சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாகில்
கூறாமல சந்நியாசம் கொள்"

"கைமாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தி
தம்மால் இயலுதவி தாம்செய்வா - அம்மா
முளைசகும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியதாம் என்று"

"தன்பங்கு தாவென்ற தம்பியும் தம்பியோடு
இன்புற்று வாழா தமையனும்
வல்லாண்மை பேசும் மனையாள் இம்மூன்றும்
சொல்லாமல் வந்த கூற்றுவன்"

- ஔவையார் -

73

ௐ

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தனது சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் உண்மைப் பொருளான சூரிய பகவானுக்கும் (சிவம் அல்லது மெய்ப்பொருள் அல்லது இறைவன்) பூமியை மட்டும் வலம் வந்து குளிர் சக்தியை நல்கிக் கொண்டிருக்கும் சக்திப் பொருளான சந்திர பகவானுக்கும், இவைகட்கு உறு துணையாக சதா காலமும் சூரிய பகவானை வலம் வரும் அகப்பொருளான அறிவு, நியாயம், நீதி ஞானம் ஆகிய சக்திகளை ஈந்து கொண்டிருக்கும் குரு, புதன், சனி, செவ்வாய் ஆகிய கிரக பகவான்களுக்கும், புறப் பொருளான கல்வி, ஆசை, தொழில் முதலிய சக்திகளைத் தரும் ராகு, வெள்ளி, கேது பகவான்களுக்கும்:

நாம் உருவாவதற்குரிய அணுவளவான விந்தை ஈந்து எம்மை இந் நிலைக்கு ஆளாக்கிய மூதாதையர் வழி தந்தைக்கும்:

அவ்விந்தை கருப்பையில் கட்டி வளர்த்து எமது உடல் உருவாக தமது உடலுழைப்பை நல்கிய அம்மைக்கும்.

எமக்கு இவ்வித அகப்பொருள், புறப்பொருள் வளர உதவி செய்து குருவாய் அமைந்த பெரியோர்கட்கும், இவற்றிற்கு மூலகாரணமாக அமைந்த தமிழ் மொழியை உருவாக்கிய ஞான மேதாவிகளுக்கும், எமது உள்ளம் சரீரம் வளரத் தேவையான உணவுச் சக்தியை அளித்துக் கொண்டிருக்கும் ஓரறிவுள்ள மரம் வகை முதற்கொண்டு ஆறறிவுள்ள மனித குலம் வரையிலான சகல ஜீவராசிகளுக்கும்.

எமது உள்ளத்திலுள்ள அறிவுப் பொருளது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் ஆத்ம திருப்தி அடைகிறோம்.

நன்றி

புலோலி மேற்கு
22-06-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

## இந் நிறுவன நிதியம் வளர்ந்து சேவை பெருக வேண்டுமென வாழ்த்துவோரில் சிலர்

| | |
|---|---|
| கைதடி சைவச் சிறுவர் இல்லம் | திரு. ஆ. கந்தையா |
| யாழ்ப்பாணம் மில்க்வைற் தொழிற்சாலை | ,, க. கனகராசா |
| வதிரி பரமானந்த ஆச்சிரமம் | ,, சுவாமிபரமானந்தா |
| கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் | ,, E. ஐயாத்துரை |
| சதாவதானி கதிரவேற்பிள்ளை ச. ச. நிலையம் | ,, செ. இரத்தினசிங்கம் |
| கோவளம் காரைநகர் | ,, சி. சோமநாதன் |
| பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் | |
| ,, மெதடிஸ்ற் உயர்தர பெண்கள் பாடசாலை | |
| ,, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி | |
| சுன்னாகம் முத்தமிழ் மன்ற நூல் நிலையம் | திரு. ஸ்ரீகுமரன் |
| யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் | ,, வி. பி. பாலசிங்கம் |
| நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி | |
| ஏழாலை இந்து இளைஞர் மன்றம் | |
| உடுப்பிட்டி அறிவகம். சன சமூக நிலையம் | |
| பொலிகண்டி விநாயகர் சன சமூக நிலையம் | |
| வல்வெட்டித்துறை றெயின்போஸ் சன சமூக நிலையம் | |
| பருத்திததுறை நகரசபை ஆணையாளர் | |
| பருத்தித்துறை காட்லிக்கல்லூரி | |
| பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை | |
| பொலிகண்டி அம்பிகை சன சமூக நிலையம் | |
| இயக்கச்சி கோவில்வயல் சீ. சீ. த க. பாடசாலை. | |

# முகவுரை

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் வையத்துள் வாழ் வாங்கு வாழ அறநெறியே உறுதுணையாகவும் ஊன்றுகோலா கவும் அமைகின்றது இவ் அறநெறியினின்றும் ஒருவர் விலகும் பொழுது அவருக்கும் விலங்குக்கும் எவ்வித வேறுபாடும் இல்லாது போய் விடுகிறது. அறவாழ்வு இம்மைக்கு மாத்திரமன்றி மறு மைக்கும் வழிகாட்டியாய் அமைவதால் அதனை மறப்பது கேடு விளையும் செயலாகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வுண்மையை நம் முன்னோர் நன்கு உணர்ந்திருந் தனர். அதனால் பிறந்து மொழி பயிலத் தொடங்கிய காலத் திலிருந்து கூனிக்குறுகிக் கோலூன்றித் தளர் நடையிடும் காலம் வரை ஒவ்வொருவரும் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிகளை வகுத்துச் சென்றுள்ளனர் அவை எமது சமுதாயத்தை பல நூற்றாண்டுகளாய் நேர் வழியில் நடத்தி வந்துள்ளன.

இன்று வரை தமிழினம் முற்றாய் அழிந்து போகாது தனது தனித்தன்மையைப் பேணி உலக அரங்கிலே மதிப்புடன் வாழ்ந்து வருவதற்கு தமிழ் சான்றோர் வகுத்த ஒழுக்க நெறியே அடிப் படைக் காரணமாகும் தெளிவாகவும் ஆழமாகவும் உறுதியாக வும் அவை கூறப்பட்டிருப்பது தனிப் பெருஞ் சிறப்பாகும்

இவற்றை அவசரயுகமாகிய 20-ம் நூற்றாண்டில் மனனம் செய்யும் வழக்கம் அருகி வருவதால் எமது முன்னோரின் அற நெறிப்பாச் செல்வங்களை இத்தலைமுறையினர் சிறிது சிறிதாய் இழந்து வருகின்றனர். இந்நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது இவ் அறநெறிச் செல்வங்களை இழப்பது போன்ற பேரிழப்பு. வேறு இல்லை எனத் துணிந்து கூறலாம்.

இத் தமிழ் மொழியிலுள்ள அறநெறிகளை நாம் மறந்து விட்டோமானால் "நாம் தமிழர்" என்று கூறி வாதம் செய்வதில் எதுவித பயனும் இல்லை எனவே இவ் அறநெறிப் பாடல்களை எமது குழந்தைகள் இடையே மனனம் செய்விக்கும் பழக்கத்தை மீண்டும் கொண்டு வருதல் எமது கடமையாகின்றது. பல நூற்றாண்டுகளின் முன்னர் வாழ்ந்து வந்த தமிழ் மூதறிஞர்கள்,

நாயன்மார்கள், சமயகுரவர்கள், முனிவர்கள் ஆகியோர் சுய நலன்கருதாது உண்மை தவறாது கடும் உடல் உழைப்புடன் சிக்கன வாழ்க்கை வாழ்ந்து யாராவது ஒரு அனாதைக்கு உணவிட்டபின்பே மிகுதியை தங்கள் உணவாகக் கொண்டுள்ளதை புராணங்கள் மூலம் நாங்கள் படித்திருக்கின்றோம் இக்காரணங்களால் அவர்கள் தாம் நினைத்த அறநெறிப் பணிகளை (சர்ப்பந் தீண்டிய குழந்தையை உயிர்ப்பித்தல். எலும்பைப் பெண்ணாக்குதல். சொன்ன சொல் தவறாது சத்தியம் காத்தமை) அறநெறிப் பாதைகளின் மூலம் செயலாக்க முடிந்தது ஆகவே இவ் அறநெறியை முற்றிலும் கடைப்பிடிப்போர் தாம நினைக்கும் நற்செயல்களை கெதியில் அடைந்தே தீருவர் என்பதில் சிறிதும சந்தேகம இல்லை அற்புதம் என்று நாங்கள் நினைப்பது மிக மிகத் தவறாகும்.

ஆகவே இந்நூலை நீங்கள் படிப்பதோடு உங்கள் இளம் பரம்பரையினரும் கற்று மனனஞ் செய்து அவற்றை வாழ்விலே செறியச் செய்ய அவர்களை ஊக்குவிப்பது நமது கடமையும் ஆன்ம ஈடேற்றமும் அறப்பணியும் ஆகும்.

புலோலி மேற்கு,
22-06-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

## நூல் விளக்கம்
### வேண்டுகோள்

இந்த அறநெறி மணிகள் வெளியீடுகளை சகல பாடசாலைகளிலும் 5-ம், 6-ம், 7-ம் ஆண்டு மாணவர்கட்கு கற்பிப்பதற்காக ஒவ்வோர் பாடசாலைக்கும் 4 பிரதிகள் வீதம் இலவசமாய் அனுப்ப எண்ணியுள்ளோம். இந் நெறியை கற்பிக்க விரும்பும் பாடசாலைகள் எம்முடன் தொடர்பு கொண்டால் பிரதிகளை அனுப்பி வைப்போம். ஆண்டு முடிவில் பாடசாலை அதிபர்கள் இதைப் பரீட்சித்து திறமையான முதல் மூன்று மாணவர்களின் விடைத்தாளையும் கொடுத்த கேள்வித் தாளையும் எமக்கு அனுப்பியதும் அவர்களுக்குரிய பரிசில்களையும் தகைமைச் சான்றிதழ்களையும் அனுப்பி வைக்க எண்ணியுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| **முதலாம்** | **பரிசாக:-** | **5200/-** | |
| **இரண்டாம்** | **பரிசாக 3 பரிசுகள்:-** | **2500/-** | **வீதம்** |
| **மூன்றாம்** | **பரிசாக 3 பரிசுகள்:-** | **1000/-** | ,, |
| **நாலாம்** | **பரிசாக 3 பரிசுகள்:-** | **500/-** | ,, |

சென்ற 1991 தை மாதம் அறநெறி மணிகள் பிரதிகளில் 1200 பிரதிகளை நேரில் கொண்டுபோய் எமது சுற்றாடலிலுள்ள 25 பாடசாலைகளுக்கு விநியோகித்து விண்ணப்பத்தை அனுப்பும்படி கேட்டிருந்தோம். 16 பாடசாலைகள் மட்டும் விண்ணப்பத்தை அனுப்பியிருந்தன அவற்றில் 5 பாடசாலைகள் ஆங்கிலக் கையெழுத்திட்டு அனுப்பியதால் அவற்றை நிராகரித்து மற்றைய 11 பாடசாலைகளிலும் அந்தந்தப் பாடசாலை அதிபர்களே பரீட்சித்து முதல் 3 மாணவர்களின் பெயரையும் கேள்வித் தாளையும் அனுப்புமாறு கடிதம் எழுதியுள்ளோம்.

சரஸ்வதி பூசைத்தினத்தன்று ஒவ்வொரு பாடசாலைகட்கும் ரூபா 1000/-, 500 -, 250/- வீதம் பரிசு கொடுக்க ஒழுங்குகள் செய்து வருகிறோம் அறநெறிவளர ஆசிரியர்களை செயல் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## பரிசுகள் பெறவிருக்கும் 11 பாடசாலைகள்

மணற்காடு றோ. க. த. க. பாடசாலை
அல்வாய் வடக்கு அ. த. க பாடசாலை
பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை
தம்பசிட்டி மெ மி த. க. பாடசாலை
தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலை
திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்
மேலைப்புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலை
நெல்லியடி மெ மி. த. க. பாடசாலை
கலட்டி றோ. க. த. பாடசாலை
புலோலி கிழக்கு அ. த. க. பாடசாலை

புலோலி மேற்கு
22-06-1991

நிறுவனர்
**விநாயகர் தரும நிதியம்**

---

சமத்துவ மனப்பான்மை, சிக்கன வாழ்க்கை, உடலுழைப்பு இவற்றால் ஆன்ம சக்தி பெருகி, உதவும் உள்ளத்தை உருவாக்கி, உள்ளத்தில் உண்மை, வாயில் வாய்மை, செயலில் மெய்ம்மை, வளர்ந்து காந்தியை மாணிக்கமாய் திகழச் செய்தன.

காந்தியின் வாழ்வு ஆண்டவன் காட்சி கொடுத்ததாலோ, கனவில் தோன்றியதாலோ உயரவில்லை.

### ஔவையார் அருளிய

# நல்வழி

#### இரண்டே சாதி

1. சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி.

சாதிகள் இரண்டே உள்ளன. நீதிவழுவாது நேரிய பாதையில், தமக்குள்ளதை பகுத்துண்டு வாழ்பவரே உயர்ந்த சாதியினர், தருமஞ் செய்யாதவரே இழிந்த சாதியினர். இதுவே அறநூலிலே கூறப்பெற்ற உண்மை.

#### உழு தொழிலே உலகின் உயர் தொழில்

2. ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

ஆற்றங் கரையில் யாவர்க்கும் நிழலளிக்கும் பெருமரமும், அரசு அறியும் வண்ணம். வாழ்கின்ற பெருவாழ்வும் ஒருநாள் வீழ்ந்து போகும். ஆனால் உழுதொழில் செய்து உண்டு வாழ்வதற்கு நிகரான வாழ்வு வேறில்லை.

#### மானமிழந்தும் வாழ்வதோ?

3. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை - சீச்சி!
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து)
உயிர் விடுகை சால உறும்.

பிச்சை எடுத்து வாழ்வதிலும் பார்க்க உயிர் விடுதல் பெருமை தரும்.

#### விதியினை வெல்லும் மதி

4. சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்.

சிவாயநம (உண்மைப் பொருள்) என்னும் மந்திரத்தினை எண்ணி யிருப்போர்க்கு ஆபத்து ஒருநாளும் இல்லை. இது தவிர்ந்த மற்றைய வழிகள் எல்லாம் விதியாய் அமையும்.

### நாற்பெரும் அற்புதங்கள்

5. தண்ணீர் நிலநலத்தால் தககோர் குணங்கொடையால்
கணணீர்மை மாறாக கருணையால - பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றாற் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி

நீர் அது சார்ந்த நிலத்தின் தன்மைக்கேற்பவும் சான்றோர் அவர்களின் கொடை நற்குணங்களுங்கேற்பவும் கண்கள் அவற்றில் அமைந்த கருணைக் கேற்பவும் சிறந்து விளங்குவதான பண்பு உலக உயர்ந்த அற்புதமாக அறிவாய் ஆக.

### பட்சபாதம் விளைவிக்கும் கேடு

6 வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

நடுநிலை இன்றி ஒரு பக்கம் சார்ந்து நீதி வழங்கியோரின் மனையிலே துன்பங்கள் சேரும், வெள்ளெருக்குப் பூக்கும். கறையான் புற்று படரும் மூதேவி (சண்டாளி) போன்றவள் தான் வாழ்க்கைக்கு அமைவாள்.

### வஞ்சமிலார் வாழ்வர்

7 நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் ஊரும்
வருந்திருவும் வாணாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையாள் தாள்.

இலக்குமித் தாய் உள்ளத்தில் கபடம் இல்லாதவர்க்கு நீர் வளத்தை யும் நல்ல வீட்டையும் நெல்விளையும் நல்நிலத்தையும், நல்லபெயரையும், கீர்த்தியையும், பெருவாழ்வையும், நன்மக்கள் நிறைந்த ஊரையும் பெருகு கின்ற செல்வத்தையும் பூரண ஆயுளையும் உவந்து கொடுப்பாள்.

### வரவுக்கேற்பச் செலவு செய்க

8. ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்குங் கள்வனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லவனாம் நாடு.

சிக்கன வாழ்க்கை வாழ்வாயாக. தவறின் மானமிழந்து அறிவும் அழிந்து கள்வனாகி நல்லவர்க்கும் பொல்லாதவனாய் மாறிவிடுவாய்.

**வினைமிக வலிது**

9. தாந்தாம்முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந் தாமரையோன் பொறிவழியே - வேந்தே
ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி.

தாம் தாம் செய்தவினை (கருமம்) களின் பயனை அனுபவித்தே தீருவர். என்ன செய்தாலும் இதை மாற்ற முடியாது.

**உள்ள மேன்மையே உயர்ந்த செல்வம்**

10. ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து

செல்வம் நிலையற்றது. தருமத்தையே துணை கொண்டு வாழ்வோர் உயர்ந்தோங்கி வாழ்வார்.

**இல்லானை எவர் விரும்புவார்?**

11. கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்ததாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல்.

பொருள் உள்ளவரை யாவரும் மதித்து வரவேற்பர் பொருள் இல்லாதவனை மனைவியோ தாயோ விரும்பமாட்டார்கள். அவனது வாய்ச் சொல்லுக்கும் மதிப்பில்லை.

**விதி என் செய்யும்**

12. வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலையுறல் நெஞ்சமே
விண்ணுறுவார்க்கு இல்லை விதி

வினை (கருமம்)ப் பயனைப் போக்குதற்கான முறைகள் எந்த வேத நூலிலும் உரைக்கப்படவில்லை உனது சிந்தனை முழுவதும் நல்லபேற்றினை அடைதல் வேண்டும் என்பதிலேயே கவனம் கொண்டு கருமம் செய்வாயாக.

### சமநிலைத் தத்துவம்

13. நன்றென்றுந் தீதென்றும் நானென்றுந் தானென்றும்
அன்றென்றும் ஆமென்றும் ஆகாது நின்றநிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவர் தேடும் பொருள்.

எல்லாவற்றையும் ஒருநிலையில் காண்கின்ற சமநிலைதான் வீடு பேற்றினை அடைவதற்கான உண்மை வழியாகும். வேறு செயல்கள் பயன் அற்ற செயலாகும்.

### ஒரு வாசகம் பற்றிய பெருவாசகம்

14. தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்.

திருக்குறளும் உபநிடதமும் தேவாரங்களும் வேதாந்த சூத்திரமும் திருக்கோவை திருவாசகமும் திருமந்திரமும் கூறுவனயாவும் (உண்மைப் பொருள்) ஒருபொருளே என்பதனை உணர்வாயாக.

### செல்வம் உருண்டோடும்

15. ஈட்டும் பொருள் முயற்சி எணணிறந்த வாயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்

பொருளைத் தேடும் முயற்சி பலவாயினும் விதி சேர்த்து வைத்தாலன்றி அனுபவிக்க முடியாது உண்மையான சேமிப்பு ''நல்லார் இவர்'' எனும் மதிப்பு ஒன்றுதான்.

### விரைந்து தருமஞ் செய்க

16. இடும்பைக் கிடும்பை இயல்உடம்பி தன்றே
இடும்பொய்யை மெய்என்றிராதே - இடுங்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழிற் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

பொய்யாகிய உடம்மை மெய் என்று இராமல் இயன்றளவு தருமம் செய்வீராக. அப்படியான தருமம் செய்தால் துன்பங்களில் நீங்கியவர்களை சிறப்பிக்கும் வீடானது உமக்கும் கிடைக்கும்.

அதிவீரராம பாண்டியன் அருளிய

# வெற்றிவேற்கை

### குரு எனும் இறைவன்

1. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்
கல்வியை ஊட்டும் ஆசிரியர் இறைவனுக்குச் சமமாவார்.

2. கல்விக் கழகு கசடற மொழிதல்
பிழை இன்றிப் பேசுதலே கல்விக்கு அழகாகும்.

3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
செல்வர்க்கு அழகானது சுற்றத்தவரைக் காத்தலாகும்.

4. வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்
மறையவர்க்கு அழகானது நான்கு வேதங்களை ஓதுதலும் அதன்படி ஒழுகுதலும்.

5. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை
அரசர்க் கழகானது செங்கோல் முறையாக மக்களைக் காத்தலேயாகும்

6. வணிகர்க் கழகு வளர் பொருள் ஈட்டல்.
பெருகும் செல்வத்தை நீதியானவழியில் சம்பாதித்தலே வர்த்தகருக்கு அழகாகும்.

7. உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்
பயிர்செய்து உண்பதே விவசாயிக்கு அழகாகும்.

8. மந்திரிக் கழகு வரும் பொருள் உரைத்தல்
எதிர்வரப் போவனவற்றை ஆராய்ந்து எடுத்துரைத்தல் மந்தி கழகாகும்.

9. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை
பயமின்மையும், வீரமும், படைத்தளபதிக்கு அழகாகும்.

10. உண்டிக் கழகு விருந்தோடு உண்டல்
விருந்தினரோடு பகிர்ந்துண்ணலே உண்ணலுக்கு அழகாகும்.

11. பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாது இருத்தல்

கணவரின் வார்த்தைக்கு எதிர் பேசாதிருக்கலே பெண்களுக்கு அழகாகும்.

12. குலமகட்கு அழகுதன் கொழுநனைப் பேணுதல்.

நற்குடியினில் பிறந்த பெண்களுக் கழகு தன் கணவனைப் போற்றி ஒழுகுதல் ஆகும்.

13 அறிஞர்க் கழகு கற்று உணர்ந்து அடங்கல்

கற்ற நூல்களின் படி ஒழுகி நடத்தலே அறிஞர்க்கு அழகாகும்.

14 வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை

சிக்கனமான வாழ்க்கையே ஏழைக்கு அழகாகும்.

**உருவு கண்டு அஞ்சற்க**

15 தேம்படு பனையின் திரள் பழத்து ஒரு விதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவர்க்கு இருக்க நிழல் ஆகாதே.

பெருமரமான பனைமரத்தின் நிழலானது ஒருவர் நிற்க உதவாத தன்மை போல் உருவால் பெருத்தவர்கள் சிறப்புற்றவர் என எண்ண வேண்டாம்.

**நன்மக்கள் எவர்**

16. பெற்றோரெல்லாம் பிள்ளைகள் அல்லர்.

ஒருவர் பெற்ற பிள்ளைகளில் அறிவு அறிந்த நன்மக்களே பிள்ளைகளாவர்.

**உற்றுழி உதவாதார் உறவினரோ?**

17. உற்றா ரெல்லாம் உறவினரல்லர்

உண்மையான ஆபத்துச் சந்தர்ப்பங்களின் உதவுபவர்களே உறவினர் எனக் கூறப்படுவர். மற்றைய எவரும் உறவினர் ஆகார்.

**சிறிதும் பெரும் பயன் தரும்**

18 தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துள் சிறுமீன் சினையிலும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

மீனின் முட்டையிலும் பார்க்கச் சிறியதாய் ஆலம்விதை இருந்தாலும் அதுவளர்ந்து மரமாகும் பொழுது பெரும் அரச சேனைகளுக்கும் நிழலைத் தரவல்லது. ஆகவே உருவிற் சிறியராய் இருந்தாலும் பயனில் குறை வானவர் எனக் கருதுதல் தவறு.

### மனை மாண்பு

19 கொண்டோ ரெல்லாம் பெண்டிரல்லர்

தாலிகட்டிய மனைவியரெல்லாம் மனைவியரல்லர் கணவனது வழி நடந்து வருபவரே உண்மை மனைவியராவர்.

### செய்யும் செய்கையே பயனுக்கு வித்து

20, பெருமையும் சிறுமையுந் தான் தர வருமே.

உயர்வு தாழ்வுகள எல்லாம் அவர் அவர்கள் செயல்களாலேயே ஒருவர்க்கு அமைகின்றன.

### தீமையைப் பொறுத்தல் சான்றோர் கடன்

21. சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்
பெரியோராயிற் பொறுப்பது கடனே.

அற்பர்கள் செய்த சிறிய பிழைகளை எல்லாம் மேன்மக்கள் பொறுத்து மன்னித்தல் கடனாகும்.

### சிறியோரின் பெரும்பிழை

22 சிறியோர் பெரும்பிழை செய்தனராயில்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே

அற்பர் செய்யும் பிழைகள் பெரியனவாய் இருப்பின் மேன்மக்கள் அவற்றை மன்னிப்பது அரிதாகும்.

### மூர்க்கரின் நட்பு

23. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர் கொள்ளாதே.

நீர் உள்ளே பாசி வேர் கொள்ளாதது போல மூர்க்கராம் உள்ளவருடன் நூறாண்டு நட்புக் கொண்டிருப்பினும் எக்காலத்திலும் பயனழிக்க மாட்டாது.

### பெரியோர் நட்பு

24 ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர்வீழ்க் குமமே.

பொரியோருடன் ஒருநாள் நட்புக் கொண்டாலும் அந் நட்பானது பெரிய நிலத்தைப் பிழந்து செல்லும் வேர்போல உறுதியாய் இருக்கும்.

### துன்புற்றோர்க்கு எவையும் ஒன்றே

25. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை

மிக வறுமை உற்றவர்க்கு நல்ல நாள் நல்ல கிழமை என்பன இல்லை எனலாம்.

### நிலையாமை

26. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

செல்வமோ வறுமையோ நிலைத்து ஒரே இடத்து நிற்பன அல்ல.

### மாறிடும் ஏறிடும்

27. குடை நிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து ஓரூர் நண்ணிலும் நண்ணுவர்

குடை நிழலில் இருந்து அரசு செலுத்திய அரசர்களும் தமது செல்வத்தை இழக்கும் போது நடந்து களைத்து தொழிலுக்காக வேற்றூரை நாடிச் செல்வதும் உண்டு

### வாழ்வும் தாழ்வும்

28. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச்சாலை அடையினும் அடைவர்

உயர்வையும் பெருஞ்செல்வத்தையும் பெருமிதத்தையும் உடையவராய் வாழ்ந்தவர்கள் அவற்றை எல்லாம் இழந்து இரந்துண்டு வாழவும் நேரும்

### வீழ்ந்தோர் எழுவர்

29. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசு ஆளினும் ஆள்வர்

இரந்து பிச்சை எடுக்கின்ற இரவலரும் (பிச்சைக்காரரும்) ஒரு நாள் அரசாட்சி நடத்திலும் நடத்திடுவார்.

### குன்றமும் குப்பை மேடாகும்

30. குன்றத் தனைய இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்

மலை போல பெரும் செல்வத்தை வைத்திருப்போரும் அது கிடைத்த அன்றே அதனை இழந்து அழியவும் நேரிடும்.

### இரப்பது இயல்பு

31. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே

பொருள் இல்லாத ஏழைகள் இரப்பது இயற்கையே

### கொடுத்தல் கடன்

32 இரந்தோர்க்(கு) ஈவதும் உடையோர் கடனே

இரந்து நிற்போருக்கு செல்வம் உடையோர் ஈந்திருத்தல் கடனாகும்

### கொடுங்கோல் மன்னர்

33. கொடுங்கோல் மன்னன் வாழு நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே

நீதியற்ற அரசர் வாழ்கின்ற நாட்டிலும் புலி வாழும் காடு சிறந்தது

### வழித்துணை

34 துணையோடல்லது நெடுவழி போகேல்.

துணைவரோடு அன்றி நீண்ட தூரம் செல்லாதே.

# விவேக சிந்தாமணி

1 அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் போம - நல்ல
குணமதிக மாம் அருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுகக் கால்

விநாயகக் கடவுளை (அறிவுப் பொருள்) பக்தியோடு வணங்கினால் சகல துன்பங்களும் நீங்கும் முன் செய்த வினைகளும், ஆணவமும் ஒழியும் இப்பிறப்பில் தேடுதேற்குரிய நற்குணம் அதிகமாகும்

2. தந்தையுரை தட்டினவன் தாயுரை இகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்தம் ஆணையை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி மாறினவர் நால்வர்
செந்தழழின் வாயினிடை சேர்வது மெய் கண்டீர்

தகப்பன் சொல்லை தள்ளி நடந்தவன் தாய் வார்த்தையை இகழ்ச்சி செய்தவன், அறிவான குருவின் ஆணையை மறந்தவன், சாந்தியைத் தரும் வேத நெறிகளை (அறநெறிகளை) மீறியவன் ஆகிய இந் நால்வரும் வினைப்பயன் காரணமாக வீழ்ச்சி அடைதல் உண்மை என்று அறியக் கடவீராக

3. ஆபத்துக் குதவாப்பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்
தாபத்தை தீராத தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டீா
கோபத்தை அடக்காவேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை ஏழும்தானே.

ஆபத்து நேரத்தில் (தேவையான நேரத்தில்) உதவாத பிள்ளையும் பசிக்கு உதவாத சாதமும், தாகவெப்பத்தை தீர்க்காத தண்ணீரும், வறுமையறியாமல் அதிக செலவு செய்யும்) செலவழிக்கும் மனைவியும், கோபத்தை அடக்காத அரசனும், ஆசிரியன் உபதேசித்த அற மொழிகளைக் வாழ்க்கையில் கடைப்பிடிக்காத மாணாக்கனும் பாவங்களை (வினைப்பயன்)த் தீர்க்காத தீர்த்தமும் ஆகிய இந்த ஏழினாலும் எவ்வித பயனுமில்லை

4. நாரிகள் வழக்க தாயின் நடுவறிந் துரைப்பார் சுத்தர்
ஏரிபோல் பெருகி மண்மேல் இருகணும் விளங்கி வாழவா
ஓரமே சொலவா ராகில் ஓங்கிய கிளையும் மாண்டு
தீரவே கண்கள் இரண்டும் தெரியாது போவர் தாமே.

ஏழைப்பெண்கள் முறையிட்ட வழக்குகளாயிருப்பினும் நியாயப்பொருள் நிலைமையறிந்து நடுவுநிலை தவறாது நீதியைக் கூறுபவர் பரிசுத்த மன முடையவர்கள் எரிநீர் பெருகுவது போல் பூமியில் இருகண்களும் (அறிவு ஞானம்) பிரகாசித்து வாழ்வார்கள் ஒருபக்கம் சார்ந்து பட்ச பாதகமாய் நீதியைக் கூறுவாராகில் சுற்றம் அழிந்து இருவிழிகளும் தெரியாத குருடராய் வருந்துவார்கள்

5. தாய்பகை பிறர்நட்பாகில் தந்தை கடன்காரனாகில்
மாய்பகை மனைவி யாகும் மாவழ குற்ற போது
பேய்பகை பிள்ளை தானும் பெருமைநூல் கல்லாவிட்டால்
சேய்பகை ஒருவர்க் காகும் என்றனர் தெளிந்த நூலோர்.

பிறருக்கு அனுகூலமாகவும் தனக்குப் பகையாகவும் இருக்கின்ற மாதா வும் அதிகம் கடனாளியாயுள்ள பிதாவும் மாயமானபகை (வெளியில் தெரி யாத பகை) கொள்ளும் மனைவியும் அறநெறிகளைக் கற்றுணராத பிள்ளை யும் ஒருவனுக்கு கிடைக்கும் ஆகில் அவன் யாவருக்கும் பகையுடையவன் (உதவாதவன்) என்றே அறநெறியாளர் கூறுவார்கள்

6. இடுக்கினல் வறுமையாகி ஏற்றவர்க் கிசைந்த செல்வம்
கொடுப்பதே மிகவும் நன்று குற்றமேயின்றி வாழ்வார்
தடுத்ததை விலக்கி னோர்க்குத் தக்கநோய் பிணிகளாகி
உடுக்கவே யுடையு மின்றி உண்சோறும் வெல்லமாமே.

துன்பம் அடைந்து வறுமையால் யாசிப்பவர்களுக்கு இயன்றளவு உதவி செய்கலே மிகவும் நல்லது அவர்கள் யாதொரு குறையும் இல்லாமல் (உண்மையாய்) வாழ்வர் கொடுக்கின்றவர்களை தடுத்து விலக்குகின்றவர் களுக்கு துன்பம், பிணிகள் உண்டாகி உடுக்கத் துணியுமின்றி உண்பதற்கு அன்னமும் கிடையாது கஷ்டப்படுவார்கள்.

7. மெய்யதைச் சொல்வாராகில் விளங்கிடும் மேலுநன்மை
வையகம் அதனைக் கொள்வார் மனிதரில் தேவராவர்
பொய்யதைச் சொல்வாராகில் போசனம் அற்பமாகும்
நொய்யரி சியர்க ளென்று நோக்கிடார் அறிவுள்ளோரே.

உண்மை (உண்மைப் பொருள்) சொல்வோரிடத்திலும் நன்மை பொலி ந்து விளங்கும் உலகத்தவர் அவரது வார்த்தைகளை ஒப்புக் கொள்வார்கள். மானிடரில் அவரே தெய்வமாவர் பொய் (ஒன்றும் இல்லாமை) சொல்ப வருக்கு உணவும் கிடையாது போகலாம் அறநெறியாளர்கள் இவர்களை நோக்கமாட்டார்கள்

8. ஏரிநீ ரிருந்த போதங் கிருந்தன பட்சி யெல்லாம்
மாரிநீர் மறுத்த போது பறவையங்கு இருப்பதுண்டோ
பாரினை யாளும் வேந்தன் பட்சமும் மறந்த போதே
யாருமே நிலையில் லாமல் அவரவர் ஏகுவாரே.

ஏரியில் நீர் நிறைந்திருக்கும் காலம் பட்சிகள் வந்து கூடும். அந்நீர் வற்றிய போது பட்சிகள் வேறு இடம் நோக்கிச் சென்று விடும். நாட்டை ஆளும் அரசன் (அறநெறி) அன்பை மறந்தபோது அங்குள்ள மக்கள் வேறு அரவணைக்கும் நாட்டைத் தேடிச் செல்வார்கள்.

9. மடுத்த பாவாணர் தக்கோர் மறையவர் கிரப்போர்க்
கெல்லாம்
கொடுத்தவர் வறுமையுற்றார் கொடாது வாழ்ந்தவரார்
மண்மேல்
எடுத்துநா குண்ட நீரும் எடாத காட்டகத்து நீரும்
அடுத்த கோடையிலே வற்றி மல்லதின் பெருகும் தானே

நெருங்கிய மேலானவர்களுக்கு கொடுத்து எவரும் வறுமை அடைய மாட்டார்கள். கொடாமல் யார் வாழ்ந்தார்கள். யாவரும் அருந்தக் கூடிய ஏரி நீரும் ஒருவரும் எடுத்து அருந்த முடியாத காட்டிலுள்ள ஏரி நீரும் கோடை காலத்தில் வற்றியும் மாரி காலத்தில் நிறைந்தும் பெருகும்தானே

10. சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுடனே அரவப்
பாய்கொண்டா லும்பணியும் பட்டீர் சுரத்தானே
நோய்கொண்டாலும் கொளலாம் நூறு வயதளவும்
பேய்கொண்டா லும்கொளலாம் பெண் கொள்ளலாகாதே

சிவந்த நிறமுள்ள தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும் ஆதி சேசனான பாம்பை பாயாகக் கொண்ட மகாவிஷ்ணுவும் வணங்கித் துதிக்கும் சிவபெருமானே (உண்மைப் பொருள்) ஒருவன் நூறு வயதளவும் நோயைக் கொண்டிருக்கலாம். பேயையும் (அறிவற்றது) கொண்டிருக்கலாம். ஆனால் நற்குணமில்லாத மனைவியரைக் கொள்ளலாகாது.

1. தன்னைத்தான் புகழ்வோருந் தன்குலமே
பெரிதெனவே தான் சொல் வோரும்
பொன்னைத் தான் தேடியறம் புரியாமல்
அவைகாத்துப் பொன்றி னோரும்
மின்னைப் போல் மனையாளை வீட்டில் வைத்து
வேசைசுகம் விரும்புவோரும்
அன்னைபிதா பாவலரைப் பகைப்போரும்
அறிவில்லாக் கசடராமே.

தன்னையே புகழ்கின்றவர்களும் தன் சாதியே பெரிதென என்று உரைய போகும் பொருளைத்தேடி தருமம் செய்யாமல் காத்து வைத்திருப்பவர்களும் மனைவி வீட்டிலிருக்க (தேககாந்தியுடைய) வேறு பெண்களை இச்சிக்கின்றவர்களும் தாய், பிதா, குரு முதலியோரை பகைத்துக் கொள்பவர்களும் ஆகிய இவர்கள் அறிவில்லாத கீழ்மக்கள் ஆவார்கள்.

12. அருமையும் பெருமை தானும் அறிந்துடன்படுவர் தம்மால்
இருமையும் ஒருமையாகி இன்புறற் கேதுவுண்டாம்
பரிவிலாச் சகுனி போலப் பண்பு கெட்டவர்கள் தம்பால்
ஒருமையின் நிரயம் எய்தும் ஏதுவேயுயரும் மன்னோ.

ஒருவனுடைய (அறநெறி) அருமை பெருமைகளை அறிந்து உடன்பாடான நட்பு கொள்வார்களாகில் இம்மை, மறுமை இரண்டிலும் இன்பத்தை அடைவதற்கு பயன உண்டாகும் துர்க்குணம் கொண்டவர்களின் (அரக்கத் தன்மை) நட்பினால் பாவங்கள் அதிகப்பட்டு நரகவேதனை அனுபவிக்க நேரிடும்.

| வடசொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| அங்கத்தினர் | — | உறுப்பினர் |
| அபிப்பிராயம் | — | கருத்து |
| அபாயம் | — | இடர் |
| ஆச்சரியம் | — | வியப்பு |
| ஆரோக்கியம் | — | உடல்நலம் |
| உக்கிரமான | — | கடுமையான |
| உதாரணம் | — | எடுத்துக்காட்டு |
| உபசாரம் | — | முகமன் கூறல் |
| உத்தரவாதம் | — | பொறுப்பு. |

உ

சில நாடுகள், சில சமுகங்கள், சில மனிதர்கள், சில பொதுப்பணி மன்றுகள் மங்கிய நிலை அடைவதற்குக் காரணம் சுயநலப் பற்றாகும்.

தொழில் செய்யும் கரங்கள் செபம் செய்யும் உதடுகளை விட பரிசுத்தமானவை.

ஞான வளர்ச்சி தீறமையுடன் தொழில் புரிதலைத் தோற்றுவிக்கிறது.

மனதை உள்முகமாகத் திருப்பி ஆற்றல்களை ஒன்று கூட்டி மனது தன்னைத்தானே துருவி ஆராயப் பழக்கு.

மனதைக் கட்டி ஆளுதலை விடக் கடினமான செயல் வேறு எதுவும் கிடையாது

சத்தியத்தில் நிலைத்திருப்பவன் சொல்லுவது சத்தியமாய் அமையும்.

எம் உள்ளத்தில் உதிக்கும் ஆசைகள் எம்மை வழிமாற்றி ஏமாற்றி வருகின்றன.

கடவுள் இல்லை என்பார் பலர் உண்மை இல்லை என்று மறுப்பவர் இலர். ஆகவே உண்மையே கடவுள்.

கணவன், மனைவி மக்கள் என்பாரும் அவர்களுக்கிடையேயுள்ள நட்புகளும் வெளித்தோற்றங்களே.

தங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்று முறை வாசியுங்கள். உங்களுக்கு இதில் புலன் செல்ல வாய்ப்பு இல்லாது போகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலை கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மன எண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள் தங்கள் உதவிக்கு நன்றி.

புலோலி மேற்கு.
22-06-1991

ஸ்தாபகர்
விநாயகர் தரும நிதியம்

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

விநாயகர்= பிள்ளையார், அறிவுப்பொருள், ௮- எண்களில் 3 கிரகங்களில் வியாழபகவான், மனித அவயவத்தில் வலக்கண இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்த நிதி= திரு. சி ஆ சிவக்கொழுந்து
திருமதி. ஆ. சி இராசம்மா
(வ. க. கோ சரவணமுத்துவின் மகள்)
செல்வன். ஆ சி. மு. சுப்பிரமணியன்

நோக்கம்— அறிவு வளர்ச்சிப் பணி
ஊனமுற்றோர் உதவிப்பணி,
கரும யோகப்பணி

**தர்மகர்த்தா சபை**

**திரு ஆ சி. முருகுப்பிள்ளை**
நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்

**திரு வ. கு கணபதிப்பிள்ளை**
B. A. (Lond) சட்டத்தரணி, உப தலைவர்

**திரு வ ச செல்வராசா**
செயலாளர் - பொருளாளர்

**திரு க தங்கராசா**
நிர்வாகப் பொறுப்பதிகாரி

கௌரவ உறுப்பினர்கள்:

**திரு அ துரைசிங்கம்**
**திரு. சு வேதாரணியம்**
**திருமதி கோ. கண்மணி**

கௌரவ உப உறுப்பினர்கள்:

**திரு. வி. க கேதீஸ்வரநாதன்**
**திரு. ஆ க. சிவப்பிரகாசம்**

குமார் அச்சகம் - பருத்தித்துறை